DEPOSITION OF WITNESS
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

MCOP No. 18/2021

மனுதாரர் தரப்பு 4 வது சாட்சி

Name டாக்டர்.இளங்கோவன்

Father's Name த/பெ. பொன்னையா

Village

Taluk

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2025

**முதல் விசாரணை :–**

1.நான் தற்போது சென்னை குளத்தூரில் FOR Ortho மருத்துவமனையை நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் நீதிமன்றத்திலிருந்து வரப்பெற்ற அழைப்பாணையின்பேரில் அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க ஆஜராகியுள்ளேன். மேற்படி மருத்துவமனையில் 60 வயதான தனபாலன் த/பெ.சக்திவேல் என்பவர் 10.06.2020 அன்று அவருடைய காலில் முறிவு ஏற்பட்டதாகவும் 5 மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற விபத்தில் அவ்வாறு முறிவு ஏற்பட்டதாக கூறி சிகிச்சைக்காக என்னுடைய மருத்துவமனைக்கு வந்தார். அவரை நான் உள்நோயாளியாக என்னுடைய மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சை அளித்தேன்.

2.மேற்படி நபரை நான் பரிசோதித்தபோது அவருக்கு ஏற்கனவே விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கு அதாவது கால் எலும்பு முறிவுக்கு அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்தாலும்கூட அந்த உடைந்த

எலும்பு கூடவில்லை. அதன்காரணமாக மேல்சிகிச்சைக்காகத்தான் என்னுடைய மருத்துவமனைக்கு வந்தார். அவரை 10.06.2020 அன்று உள்நோயாளியாக அனுமதித்து 12.06.2020 அன்று மேலும் ஒரு அறுவைசிகிச்சை நான் செய்தேன். அதன்பின் அவர் தொடர்ந்து சிகிச்சையில் இருந்தபோது ஓரளவிற்கு அவருக்கு ஏற்பட்டிருந்த பாதிப்பு சரியான காரணத்தினாலும் மேற்கொண்டு உள்நோயாளியாக அவர் சிகிச்சையிலிருக்க தேவையில்லை என நான் முடிவு செய்து 18.06.2020 அன்று மேற்படி நபர் என்னுடைய மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். ஏற்கனவே மேற்படி நபருக்கு தூத்துக்குடியில் அவர் அறுவைசிகிச்சை மேற்கொண்டிருந்த அதே பகுதியில் அதாவது Tibia எலும்பு பகுதியில் ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த பிளேட், Screw ஆகியவற்றை அகற்றிவிட்டு என்னுடைய சிகிச்சை முறைப்படி புதிதாக implants வைக்கப்பட்டு Bone Grafting சிகிச்சையும் மேற்கொள்ளப்பட்டது.

3.ஏற்கனவே அறுவைசிகிச்சை செய்யப்பட்ட இடத்தில் நான் மீண்டும் எலும்பு கூடாத காரணத்தினால் அறுவைசிகிச்சை செய்த வகையில் நோய் தொற்று ஏற்பட வாய்ப்புண்டா என்றால் வாய்ப்புண்டு. என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபருக்கு தற்போது வயது 60 என்று கூறியுள்ள வகையில் அந்த வயது மேற்கண்டவாறு நோய்தொற்று ஏற்பட்டு அதன் காரணமாக அவருக்கு இறப்பு ஏற்படலாமா என்றால் வாய்ப்புண்டு. மேற்படி என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபருக்கு என்னுடைய மருத்துவமனையில் சிகிச்சை வழங்கப்பட்ட விவரங்கள் அடங்கிய Inpatient Case Sheet நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.5.**(அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது).

4.மேற்படி என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபருக்கு நான் வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.6.** அதன் அசல் பொதுவாக சிகிச்சைக்கு வந்த நபர் டிஸ்சார்ஜ் ஆகும்போது அவரிடமே கொடுத்துவிடுவோம். தற்பொழுது நார் பார்வையிடும் ரூ.7,149/- க்கான 12 மருத்துவ ரசீதுகள் மேற்படி தனபாலன் என்பவருக்கு எங்கள் மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டவைதான். **அது ம.சா.ஆ.12.** மேற்படி நபர் என்னுடைய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கு மொத்தமாக எவ்வளவு செலவானது என்றால் எங்கள் மருத்துவமனையிலுள்ள கோப்பில் உள்ள Final Bill அடிப்படையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்ற காலத்தில் மொத்தம் ரூ1,68,831/- செலவு ஏற்பட்டுள்ளது. அந்த Final Bill நகல் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.7.** அதன் அசல் ஆவணம் சிகிச்சை பெற்ற நபர் டிஸ்சார்ஜ் ஆகும்போது அவரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது. (சா.சா.ஆ.6, 7 நகல் ஆவணங்கள் என்ற முறையில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எழுப்பப்பட்ட ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது.)

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை: -</u>**

1.எங்கள் மருத்துவமனையால் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரியில் Implant Removalக்காக மேற்படி தனபாலன் சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவர் சிகிச்சைக்காகத்தான் வந்தார். அப்போது எனது சிகிச்சை முறையின்படி ஏற்கனவே வைக்கப்பட்ட Implant நீக்கப்படவேண்டும் என நான் முடிவு செய்து சிகிச்சை அளித்தேன். டிஸ்சார்ஜ் சம்மரியில் Patient now came here for implant exit என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கொண்டு எங்கள் மருத்துவமனையில் மேற்படி நபருக்கு செய்யப்பட்ட சிகிச்சை

விவரங்கள் Procedure என்று குறிப்பிட்டு அதே ஆவணத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. முதலில் அறுவைசிகிச்சை செய்யப்பட்டு சுமார் 6 மாதம் கழித்துதான் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக மேற்படி நபர் வந்துள்ளார் என்றால் சரிதான்.

2.மேற்படி என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபர் முதலில் அறுவைசிகிச்சை அவர் செய்த மருத்துவமனையால் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரியில் Patient good and stable condition ல் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டதாகத்தான் குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரிதான். பொதுவாக கால் முட்டிற்கு கீழ் Tibia, Fibula என்ற 2 எலும்புகள் உண்டு என்றால் சரிதான். மேற்படி என்னிடம் சிகிச்சை பெற்ற நபருக்கு Tibia எலும்பு மட்டுமே முறிவு ஏற்பட்டுள்ளது என்றால் மேற்படி 2 எலும்புகளுமே முறிவு ஏற்பட்டுள்ளது. அந்த விவரம் Case Sheet ல் குறிப்பிட்டுள்ளேன். மொத்தம் 9 நாட்கள்தான் உள்நோயாளியாக என்னுடைய மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி நபர் என்னுடைய மருத்துவமனையிலிருந்து சிகிச்சைக்கு பிறது நல்ல நிலையில்தான் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். டிஸ்சார்ஜ் சம்மரியில் ஏற்கனவே மேற்படி தனபாலன் என்பவருக்கு வேறு Infection தொற்று இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

3.நான் முதல் விசாரணையில் கூறியுள்ளபடி Infection தொற்று இருந்திருந்தால் மட்டுமே அதனால் இறப்பு ஏற்படக்கூடும் என கூறுகிறேன் என்றால் சரிதான். 18.06.2020 அன்று டிஸ்சார்ஜ் செய்யப்பட்டபிறகு மேற்படி நபர் மேற்கொண்டு சிகிச்சைக்காக எதுவும் என்னுடைய மருத்துவமனைக்கு வரவில்லை என்றால் சரியாக ஞாபகமில்லை. தற்போது தாக்கல் செய்துள்ள மருத்துவ

ஆவணங்களின்படி 18.06.2020 க்கு பிறகு அவர் சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான். மேற்படி நபர் என்னுடைய மருத்துவமனையில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு சுமார் 2 ஆண்டுகள் கழித்து 18.10.2022 அன்று இறந்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அழைப்பாணையை பார்த்துதான் தெரிந்துகொண்டேன்.

4.நான் சிகிச்சையளித்ததன் அடிப்படையில் மேற்படி நபர் நான் சிகிச்சை அளித்த அதே காயத்தினால் சுமார் 2 ஆண்டுகள் கழித்து இறக்க வாய்ப்புள்ளதா என்றால் பொதுவாக அதே காயத்தினால் அவர் இறக்க வாய்ப்பில்லை. ஆனால் அந்த பகுதியில் ஒரு தொற்று Infection ஏற்பட்டிருந்தால் இறக்க வாய்ப்புண்டு. பொதுவாக ஒருநோயாளி டிஸ்சார்ஜ் செய்யப்படும்போது டிஸ்சார்ஜ் சம்மரி மற்றும் Final Bill அசல் அவரிடம் வழங்கிவிடுவோம் என்றால் சரிதான். Discharge Summary, Final Bill அசல்களை வைத்து பொதுவாக மெடிக்கல் Claim செய்துகொள்ளலாம் என்றால் சரிதான்.

**மறு விசாரணை :-** இல்லை.

ஒம்/-P.V.வஷீத்குமார்
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**தூத்துக்குடி.**

.